# அக்குரண பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அக்குரண பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 121,177 பெறுமதியான ஆயுர்வேத மருந்துகளின் இருப்பு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்யப்பட்ட 118 பொருட்களின் பெறுமதி உரிய சொத்துக் கணக்குகளிலிருந்தும் மூலதன வருமானப் பங்களிப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 914,020 தொகை செலவில் பூர்த்திசெய்யப்பட்ட கைத்தொழில் மற்றும் 5 பல்வேறு செயற்திட்டங்களின் பெறுமதி, நிலையான சொத்துக் கணக்கிற்கும் மூலதன வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் பட்டியலிடப்படாது காசு அடிப்படையில் அதாவது கிடைத்த காசு மட்டுமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நீர் கட்டணங்களுக்கு உரித்தான ஓர் பதிவேடு பேணப்பட்டிராததுடன் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் பொது நிர்வாக விநியோக மற்றும் உபகரணச் செலவினங்கள் ரூபா 1,666,925 தொகையானதுடன் வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,809,949 ஆனமையால் ரூபா 143,024 தொகையான வழங்கவ்களும் உபகரணங்களும் கணக்குகளில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) கடந்த ஆண்டின் போது கொடையாளி ஒருவரால் அன்பளிப்பு உறுதியின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஆதனம் மதியிடப்பட்டிருக்கவில்லை. அவ் ஆதனம் காணி கட்டிடப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் கணக்குகளுக்கும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 12,674,932 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,076,356 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,226,374 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 3,025 | 5,905 | 1,792 |
| (ii) | வாடகை | 5,053 | 2,889 | 623 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,105 | 2,707 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,065 | 5,218 | 6,061 |